## பிப்ரவரி - 17

**"என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளுங்கள். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது"**

**- மத் 11 : 29, 30**

இந்த நுகத்தை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு, சகலமும் நன்மைக்கு ஏதுவாக அவர்களுக்கு நடக்கிறது என்ற தெய்வீக வார்த்தையின் நிச்சயம் கிடைக்கிறது. மிகவும் பாரமான சுமைக்கு அதிகமான ஆசீர்வாதமும் பலனும் கொஞ்ச காலம் சென்று கிடைக்கும். தற்காலத்தில் கிடைக்கிற மிகவும் கடுமையான அனுபவங்களுக்கு, அடையப்போகும் மகிமை அதிக சந்தோஷமானதாகவும், அவர்களுடைய குணம் அதிக பிரகாசமுள்ளதாயும் இருக்கும். ராஜ்ஜியத்திற்காகத் துவக்கப்பட்டு தகுதியாக்கப்படுகிறார்கள் என்ற அதிக நிச்சயம் கொள்ளலாம். இந்தக் கருத்தின் படி ஒவ்வொரு சுமையும் இலகுவானதாயிருக்கிறது. ஏனெனில், நமது சுமை உயர்வாக மதிக்கப்படுகிறது. அது சுலபமானதாயும், நியாயமானதாயும் இருக்கிறது. கூடுதலாக, இந்த நுகத்தில் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற காரணத்தால் அது எவ்வளவு இலகுவாக இருக்கிறது.

- Z ’00, 137 (R 2623)

கர்த்தரின் சித்தத்தை பொதுவாக நாம் ஏற்றுக் கொள்ளுவதே நுகம். நாம் செய்வதற்கு கர்த்தர் சித்தம் கொண்டிருக்கும் விவரங்கள்தான் சுமை. அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் துன்பமும் அனுபவிக்க வேண்டும். அன்பின் ஆவியால் சுமையை ஏற்றுக் கொள்ளும் போது உண்மையாகவே அதன் பாரம் இலகுவாக இருப்பதைக் காண்கிறோம். கர்த்தரின் சித்தத்தின் விவரங்களாகிய சுமையை அன்பின் நுகத்தின் ஒத்தாசையாய் கஷ்டத்தோடு இழுக்கும் போது, இலேசாகப் படுகிறதை காண்கிறோம். அன்பு ஒவ்வொரு சுமையையும் இலேசாக்குகிறது, ஒவ்வொரு வேலையையும் இலகுவாக்குகிறது, ஒவ்வொரு நுகத்தையும் சந்தோஷப்படுதுகிறது, ஒவ்வொரு வருத்தத்தையும் பரிசுத்தமாக்குகிறது, மிகச் சிறிய வேலைகளையும், மிக சாதாரண காரியங்களையும் பேரின்பத்தின் ஒளிவட்டத்தினால் சூழ்ந்து கொள்ளுகிறது.

- P ’27, 15.

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 16:24; மாற் 8:34-38; லூக் 9:23,24; 1யோவா 5:3 லேவி 26:13; ஏசா 9:4; 10:27; ஏரே 2:20; 5:5; 30:8; புல 3:27; நீதி 23:26; ரோம 6:13,16,19; 12:1; 2கொரி 8:5;

**கோபுர வாசிப்பு** : Z ’00, 134 (R 2623).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் கிறிஸ்துவின் சுமையும் நுகமும் எனக்கு எப்படியிருப்பதாகக் கண்டேன்? அதன் பலன் என்ன?